கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (19.3.2026) மாலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் கிருஷ்ணகிரி, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடத்தினார். இந்த நேர்காணலில் கழக துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டார். இதில் கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில்

குற்றவாளி கைது! உச்சபட்ச தண்டனையை உறுதி செய்வோம்!

கனிமொழி கருணாநிதி எம்.பி. உறுதி!

சென்னை, மார்ச் 21 -

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கு குறித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கு குறித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவரு மான கனிமொழி கருணாநிதி தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளது வருமாறு:-

விளாத்திகுளம் மாணவி கொலை வழக்கில் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு, குற்ற வாளியைக் கைது செய்துள்ளது தமிழ்நாடு காவல் துறை. அச்சமூக விரோதி உச்சபட்ச தண்டனைப் பெறுவதை உறுதிசெய்வதோடு, பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு உரிய நீதி கிடைக்கவும், இத்துயரிலிருந்து மீண்டு வரவும் துணையாக இருப்போம்.

குற்றவாளிகளைத் தண்டிப்பதை சட்டம் உறுதி செய்யும். ஆனால், குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் பாதுகாப்பான சூழலை ஒரு சமூகமாக நாம் அனைவரும் சேர்ந்தே உறுதிப்படுத்த முடியும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கட்டுமானப் பணிகளில் அசாதாரண தாமதம் ஏன்?

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை எப்போது கட்டி முடிக்கப்படும்?

மக்களவையில் – டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 21 -

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகளில் அசாதாரண தாமதம் ஏன்? எப்போது கட்டி முடிக்கப்படும் என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் மிகவும் தாமதமானதற்கான காரணம் என்ன? மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் விரைந்து முடிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகளுக்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மற்றும் ஒன்றிய அரசு இதுநாள் வரை வழங்கிய நிதி விவரங்கள் தருக?

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு இதுகாறும் செலவிடப்பட்ட நிதி விவரங்கள் மற்றும் மதுரை எய்ம்ஸ் கட்டி முடிக்கப்படும் உத்தேச காலஅவகாசம் என்ன?

நாட்டின் பல்வேறு இடங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு இதுவரை ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதி விவரங்கள், எய்ம்ஸ் மருத்துவமனை வாரியாக தருக? என மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

பிரதம மந்திரி ஸ்வஸ்த்ய சுரக்ஷா யோஜனா (பிஎம் எஸ்எஸ்ஒய்) கீழ், அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (எய்ம்ஸ்) மதுரையை நிறுவ ரூ. 2021.51 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டது. இதில் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமையின் (JICA) கடன் கூறு ஜப்பானிய யென் 22,788,000,000 மட்டுமே. (ரூ.1321 கோடி)

இதுவரை, ஒன்றிய அரசு அமைச்சகம் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட 471.02 கோடி ரூபாய் செலவழித்துள்ளது. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் குடிமராமத்து பணிகளின் தற்போதைய முன்னேற்றம் 47% ஆகும். மார்ச் 2021 இல் ஜப்பான் அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட கடன் ஒப்பந்தத்தின் படி, திட்டப்பணியை நிறைவு செய்வதற்கான இலக்கு தேதி அக்டோபர் 2026 ஆகும்.

மதுரை எய்ம்ஸ் திட்டங்களின் நிறைவானது, மாநில அரசு, ஒழுங்குமுறை அனுமதிகள் மற்றும் தளம் சார்ந்த சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளைப் பொறுத்தது. திட்டத்தின் முன்னேற்றம் நிறுவனம் மற்றும் அமைச்சகத்தின் மட்டத்தில் அனைத்து பங்குதாரர்களுடன் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

இத்திட்டத்தை சுமுகமாக செயல்படுத்துவதைக் கண்காணிக்கவும், வசதி செய்யவும் தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் (சுகாதாரம்) தலைமையில் ஒரு வழிகாட்டுதல் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் (எய்ம்ஸ்) நிலை இணைப்பில் தரப்பட்டுள்ளது. அதன் படி தமிழ் நாட்டில் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை, ஹரியானாவில் ரேவரி எய்ம்ஸ் மருத்துவமனை, காஷ்மீர் அவந்திபுரா எய்ம்ஸ் மருத்துவமனை ஆகிய மூன்று இடங்களில் கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவு பெறவில்லை என்பது தெரிகிறது.

இவ்வாறு அவர் பதிலளித்தார்.

உள்நாட்டு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க

அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும்!

நாடாளுமன்றத்தில் - கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 21 -

இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்படும் Finished upvc பொருட்கள் அசுர வேகத்தில் அதிகரித்துள்ளதால், உள்நாட்டு சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சந்திக்கும் நெருக்கடிகள் குறித்து ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் மக்களவையில் உரை சமர்ப்பித்தார். நாடாளுமன்ற விதி 377ன் கீழ் இப்பிரச்சினையை எழுப்பிய அவர், உள்நாட்டுத் தொழில்துறையை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை ஒன்றிய அரசு அவசரமாக எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அகில இந்திய uPVC உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தரவுகளைச் சுட்டிக்காட்டிய அவர், கடந்த டிசம்பர் 2022 முதல் நவம்பர் 2025 வரையிலான காலக்கட்டத்தில் மட்டும் சுமார் 2,86,398 மெட்ரிக் டன் எடையுள்ள Finished uPVC பொருட்கள் இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். குறிப்பாக, 2023ஆம் ஆண்டில் 76,075 மெட்ரிக் டன்னாக இருந்த இறக்குமதி அளவு, 2025ஆம் ஆண்டில் 1,05,926 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த இறக்குமதியில் பெரும் பகுதி சீனாவிலிருந்து வருவதாகவும், அவற்றின் சராசரி விலை ஒரு கிலோவிற்கு சுமார் 92 ரூபாய் மட்டுமே என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில்ஒருகிலோ uPVC தயாரிப்பதற்கான விலை 135 ரூபாய் முதல் 160 ரூபாய் வரை இருக்கும் சூழலில், சீனாவிலிருந்து அவை வெறும் 85 முதல் 100 ரூபாய் வரை இந்தியச் சந்தைக்குள் நுழைவது இந்திய உற்பத்தியாளர்களைச் சந்தையிலிருந்து வெளியேற்றும் என்று அவர் எச்சரித்தார்.

மேலும், uPVC தயாரிப்பதற்கான மூலப்பொருட்களுக்கு AntiDumping வரி விதிக்கப்படும் நிலையில், முழுமையாக முடிக்கப்பட்ட இறக்குமதிப் பொருட்களுக்கு அடிப்படை சுங்க வரி மட்டுமே விதிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வரிச் சலுகையைச் சாதகமாக்கிக் கொண்டு சீனப் பொருட்கள் இந்தியச் சந்தையை ஆக்கிரமித்து வருவதாகவும், இது உள்நாட்டு உற்பத்தியா ளர்களின் வளர்ச்சியைத் தடுத்து, லட்சக் கணக்கான வேலைவாய்ப்புகளை கேள்விக்குறியாக்கியுள்ளதாக அவர் கவலை தெரிவித்தார்.

உள்நாட்டுத் தொழில் நிறுவனங்களை பாதுகாப்பதற்கு உடனடியாக தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று, திரு. கே.இ.பிரகாஷ் ஒன்றிய அரசை வலியுறுத்தினார்.

தமிழ்நாட்டில் உள்ள வேளாண் அறிவியல் மையங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கடந்த மூன்று ஆண்டுகளில் அதற்கு ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்ட நிதி எவ்வளவு?

மக்களவையில் - தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 21 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் மக்களவையில் எழுப்பிய கேள்வி பின் வருமாறு:

தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் மையங்களின் (KVKs) எண்ணிக்கை மற்றும் அடுத்த 5 ஆண்டுகளில் நிறுவப்படவுள்ள மொத்த (KVKs) எண்ணிக்கை எவ்வளவு?

தற்போதுள்ள KVKS களை வலுப்படுத்தவும், விவசாயிகளுக்கு மேம்பட்ட வேளாண்மை அறிவு, தொழில்நுட்பம் மற்றும் விரிவாக்க சேவைகளை வழங்கும் அவற்றின் திறனை மேம்படுத்தவும் ஒன்றிய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?



KVKS களின் தற்போதைய செயல்பாட்டில் ஒன்றிய அரசு ஏதேனும் சவால்களையோ அல்லது குறைபாடுகளையோ கண்டறிந்துள்ளதா ? அவற்றை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன?

கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் KVKS களை வலுப்படுத்தவும் விரிவாக்கவும் ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி எவ்வளவு?

விவசாயிகளுக்கான விரிவாக்க சேவைகளை மேம்படுத்துவதற்காக, KVKS களின் செயல்பாடுகளில் டிஜிட்டல் கருவிகள், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தரவு பகுப்பாய்வு போன்ற நவீன தொழில் நுட்பங்களை ஒருங்கிணைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ள விதம் என்ன?

தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தித்திறன், விவசாய வருமானம் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளை ஊக்குவிப்பதில் KVKs களின் தாக்கம் என்ன?

இவ்வாறு தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்

தேதி மாற்றம்

21–3–2026 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த மாவட்டங்கள் 23–3–2026 அன்று நடைபெறும்

தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்கு போட்டியிட விரும்பி விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் ஏற்கனவே 21–3–2026 சனிக்கிழமை அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த மாவட்டங்கள் ரமலான் பண்டிகையை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டு, 23–3–2026 (திங்கள்கிழமை) அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

மார்ச் 23 திங்கள்	காலை 9.00 மணி	திருச்சி வடக்கு, திருச்சி மத்திய,திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, பெரம்பலூர், அரியலூர்
மார்ச் 23 திங்கள்	மாலை 4.00 மணி	புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை நாகப்பட்டினம், திருவாரூர்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 19-3-2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்!

தலைமைக் கழக அறிவிப்பு!

தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்குப் போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் செலுத்தியவர்களை கழகத் தலைவர் அவர்கள் 17–03–2026 முதல் 22–03–2026ஆம் தேதி வரை, பின்வரும் மாவட்ட வாரியாக சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாகச் சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்திட இருக்கிறார்கள்.

குறிப்பிட்டுள்ள தேதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர் மட்டும் வரவேண்டும். மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்கள் வரவேண்டிய அவசியமில்லை. வேட்பாளர்கள் தங்களுக்கான ஆதரவாளர்களையோ, பரிந்துரை யாளர்களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையும் 'அவர்களுக்காக விருப்ப மனு' செலுத்தியோரையும் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட வாரியாக நேர்காணல் நடைபெறும் நாள் விவரம்

நாள் – கிழமை	நேரம்	மாவட்டம்
மார்ச் 22 ஞாயிறு	காலை 9.00 மணி	கடலூர் கிழக்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் தெற்கு, காஞ்சிபுரம் தெற்கு.
,, ,, ,,	மாலை 4.00 மணி	திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை கிழக்கு

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.